# தமிழ் வளர்ச்சிக் கழகம்

## செய்தி மின் மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும்
2 : 8 செப்டம்பர் 2026








### உங்களுடன்

தமிழ் வளர்ச்சிக் கழக
உற்சாகத்தில்
உங்களுடன் நானும்!

எண்பது ஆண்டு கால வரலாற்றில்
இப்படியொரு சாதனை
இதுவே முதல்முறை!

நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்
தமிழ் வளர்ச்சிக் கழக
அறங்காவலர் குழுத் தலைவர்
மேனாள் ஒன்றிய நிதி அமைச்சர்
மாண்பமை திரு. ப.சி. அவர்கள்!

தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டு
இந்தியா விடுதலை அடைவதற்கும்
முதல் நாள் 1947 ஆகஸ்ட் 14
தமிழ் மொழி அறிவியல் கருத்துகளோடு
கண்விழிக்கக் கலைக்களஞ்சியப் பணிகளின்
அறிவிப்பு!

அறிவிப்பு வந்த இரண்டே நாட்களில்
கிடைத்திருக்கிறது
இரண்டு இலட்சம் ரூபாய் நன்கொடை!

அப்போது
முதல் புரவலராக 10,000 ரூபாய்
கொடை வழங்கியிருப்பவர்
காரைக்குடி திரு. இராம அழகப்ப செட்டியார்!
ஆனால் கலைக்களஞ்சியப் பணிகளுக்குத்
தேவை 14 இலட்சம் என்று
நிதி திரட்ட முயன்றிருக்கிறார்கள்!

அப்போதைய
ஒன்றிய அரசின் நிதியமைச்சர்
திரு. ஆர்.கே. சண்முகம் செட்டியார்
ஒன்றிய அரசின் வழி
ஆண்டுக்கு 75 ஆயிரம் என்று
நான்கு ஆண்டுகளுக்குத் தருவதாக
உறுதி தந்திருக்கிறார்.

சென்னை மாகாண அரசு
ஆண்டுக்கு ஒரு இலட்சம் என்று
ஐந்து இலட்சத்திற்கு மிகாமல்
பொது மக்களிடமிருந்து
திரட்டும் நிதிக்கு ஏற்ப
இருமடங்கு தருவதாகத்
தெரிவித்திருக்கிறது.

அப்படி நடந்திருக்கிற
கலைக்களஞ்சியப் பணிகள்
வியப்பைத் தருகின்றன!

ஆனாலும் இடையிடையே
நிதி நெருக்கடியிலிருந்து
நிரந்தரமாக மீண்டு
தொய்வின்றிப் பணிகள் தொடரத்
தமிழ் வளர்ச்சிக் கழகம் வழி தேடிக்
காத்திருந்த நிலையில்தான்
அறங்காவலர் குழுத் தலைவராக
மாண்பமை திரு. ப.சி. அவர்கள்
கிடைத்தார்கள்!

2025 இல் தமிழ்நாடு அரசிடமிருந்து
இரண்டு கோடி ரூபாய் நல்கை!
அரசு இரண்டு கோடி தருகிறபோது
பொதுமக்களிடமிருந்து
புரவலர் நிதியாக ஒரு கோடி ரூபாய்
திரட்டுகிறோம் என்று

அப்போது அரசுக்குத் தந்த உறுதிமொழிப்படி
ஒரு கோடி ரூபாயைப்
புரவலர் நிதியில்
சேர்த்திருக்கிறார்கள் இப்போது!

முன்மாதிரியாகத் தானே
10 இலட்சம் வழங்கித்
தொடங்கி வைத்த திட்டம்
வி.ஐ.டி. வேந்தரிடமிருந்து 10 இலட்சம்
தினத்தந்தி குழுமத் தலைவர்
திரு. பாலசுப்பிரமணியன் ஆதித்தன்
அவர்களிடமிருந்து 10 இலட்சம் என்று
புரவலர் நிதியாக ஒரு கோடி ரூபாய்
வைப்புத் தொகையாகி இருக்கிறது!

அரசு வழங்கிய
இரண்டு கோடியையும் சேர்த்து
வைப்புத் தொகைக் கணக்கில்
இப்போது மூன்று கோடி ரூபாய்!

நிதித் தட்டுப்பாடின்றித்
தமிழ் வளர்ச்சிக் கழகம் பயணிக்க
வழியமைத்துத் தந்திருக்கிறார்
அறங்காவலர் குழுத் தலைவர்
ஆகவே இனி
திட்டப் பணிகளில்
தீவிரம் காட்ட
உங்களுடன்...

ம.ரா.

## நிருவாகக் கூட்டம்

03.08.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நிருவாகக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதி, நிருவாகம், திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

## ஆலோசனைக் கூட்டம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 05.08.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் தலைமையில் புதிய ஆய்வுத் திட்டம் சார்ந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேரா. சா. சரவணன், முனைவர் ம. இளங்கோவன், மற்றும் முனைவர் சிவ முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம் என்னும் பொருண்மையில் களஞ்சியப் பணியைத் தொடங்க ஆலோசிக்கப்பட்டது. இத்திட்டப் பொருண்மையில், சங்க இலக்கியங்களில் காணப்படும் நம்பிக்கைகள், சடங்குகள், கதைகள் போன்ற தொன்மங்கள் குறித்துக் களஞ்சியத்தை உருவாக்குவது என வரையறுக்கப்பட்டது.



## சிந்தனைக் களஞ்சியக் கூட்டம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 12.08.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் தலைமையில் சிந்தனைக் களஞ்சியம் தொடர்பான ஆய்வுத் திட்டம் சார்ந்த கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின் வருவோர் கலந்துகொண்டனர்.

முனைவர் சா. சரவணன், முனைவர் ஒப்பிலா மதிவாணன், முனைவர் வாணி அறிவாளன், முனைவர் ம. இளங்கோவன், முனைவர் இராமசாமி, மற்றும் முனைவர் சிவ முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் இத்திட்ட ஆய்வாளர் முனைவர் வாணி அறிவாளன் அவர்கள் சிந்தனைக் களஞ்சியத்தின் திட்ட முன்னேற்றம் குறித்து எடுத்துரைத்தார். சங்க இலக்கியங்களில் காணலாகும் சூழலியல் சிந்தனைகள் குறித்து விளக்கப்பட்டன. தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் அவர்கள் இத்திட்டத்தைச் செம்மையாக்குவதற்குரிய வழிமுறைகளை விரிவாக எடுத்துரைத்தார்.



## தொன்மக் களஞ்சியக் கூட்டம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 18.08.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் தலைமையில் தொன்மக் களஞ்சியத்தை மேம்படுத்துவதற்காக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின் வருவோர் கலந்துகொண்டனர்.

1. பேரா. சா. சரவணன், 2. முனைவர் ம. இளங்கோவன்

இக்கூட்டத்தில் செவ்விலக்கியத் தொன்மக் களஞ்சியம் உருவாக்குதல் குறித்துக் கூட்டம் நடைபெற்றது. இதில் பேராசிரியர் சா. சரவணன் அவர்கள் தொன்மம் என்பது மக்கள் உருவாக்கிய சடங்குகள், கேள்விக்கு இடமின்றித் தொடர்ந்து பின்பற்றுவதற்கான காரணம் கற்பித்து சடங்கில்லாக் காலத்தில் இருந்து தொடர்வது தொன்மம் என்றும், அதுவே மரபாக வரும்போது விவாதத்திற்கு உட்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுத் தொடர்ந்து பின்பற்றும் மரபினைக் குறிக்கும் என்றார்.



தொன்மக் களஞ்சியத்தோடு பேராசிரியர் ஒப்பிலா மதிவாணன் அவர்கள் தமிழ்நூற் பொருட்களஞ்சியம் என்ற தலைப்பில் தந்துள்ள தகவல்களையும் உள்ளடக்கி பக்தி இலக்கியம் வரை உள்ள, சடங்கு, நம்பிக்கை, பழக்கம் முதலியவற்றையும் தொகுக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

## சொல்புதிது 16

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சொல் புதிது என்னும் திட்டத்தின் பதினாறாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 19.08.2026 புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் இறுதி செய்யப்பெற்ற சொற்கள் பின்வருமாறு:

| வ. எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1 | Metro station | மாநகர்த் தொடரி நிலையம் |
| 2 | Combo offer | இணைச் சலுகை |
| 3 | Vendor compartment | வணிகச் சுமைப் பெட்டி |
| 4 | Toxin free Cookware | நச்சிலா அடுகலன் |
| 5 | Trampoline | குதிமேடை |
| 6 | Protocol duty | மரபு முறைப் பணி |
| 7 | Open talk | மனம் திறந்த பேச்சு |
| 8 | House full | அரங்கு நிறை |
| 9 | Resto bar | மது உணவகம் |
| 10 | Top Load | மேல் மூடி |

| | | |
|---|---|---|
| 11 | Front Load | பக்க மூடி |
| 12 | Laundry label/laundry tag | சலவைக் குறி |
| 13 | Laundry ball | சலவைப் பந்து |
| 14 | Sequins | மின்மினிச் சுடரி |
| 15 | OTT release | இணையப் படத்தள வெளியீடு (இ.ப.த. வெளியீடு) |
| 16 | KYC | வாடிக்கையாளர் அறி தகவல் (வா.அ.த ) |
| 17 | Orbital rocket | சுற்றுப்பாதை ஏவூர்தி |
| 18 | Molecular diagnostics | மூலக்கூறு வழி நோயறிதல் |
| 19 | Clinical diagnostics | மருத்துவர் வழி நோயறிதல் |
| 20 | Gear shift | இயக்க மாற்றி |
| 21 | Gear stick | இயக்க மாற்றித் தண்டு |
| 22 | License plate | வண்டிப் பதிவெண் தகடு |
| 23 | Newsfluencer | செய்தி ஊடக ஊக்குநர் |
| 24 | Gymfluencer | உடற்பயிற்சி ஊக்குநர் |
| 25 | Machine Washable | இயந்திரச் சலவைக்கும் |
| 26 | Synthetics | செயற்கை நார்த் துணி |
| 27 | Delicate/ Gentle care | மென்சலவை |
| 28 | Hand wash | கைச் சலவை |
| 29 | Do not wash | நீரில் துவைக்கக் கூடாது |
| 30 | Do not wring | பிழியக் கூடாது |
| 31 | Chin harmonization surgery | தாடை ஒத்திசை அறுவை சிகிச்சை |
| 32 | Food festival | உணவுத் திருவிழா |
| 33 | Food carnival | உணவுக் கொண்டாட்ட விழா |
| 34 | Epiq screen | உயர்தரப் பெருந்திரை |
| 35 | Recliner | சாய்விருக்கை |
| 36 | Mindcare clinic | மனநல மருத்துவமனை |
| 37 | Money Mule | பணம் கடத்தி |
| 38 | Drop shipping | கடையில்லா வணிகம் |
| 39 | Sound artist | ஒலிக் கலைஞர் |
| 40 | Massage centre | தசைப் பயிற்சி மையம் |
| 41 | Zero FIR | முதற்கட்டத் தகவல் அறிக்கை |

| | | |
|---|---|---|
| 42 | Foot reflexology | பாத அழுத்த சிகிச்சை |
| 43 | Power Slap game | பேயறைப் போட்டி |
| 44 | Baggy Pant | தளர் கால்சட்டை |
| 45 | Flying kick | தாவி உதை/ தாவி உதைத்தல் |
| 46 | Off the record | உள்ளகப் பதிவு |
| 47 | Body art | உடல் ஓவியம் |
| 48 | Bubblegum | மெல்லு மிட்டாய் |

**பிறமொழிச் சொற்களுக்கு நிகராகத் தமிழில் சொற்கள் உருவாக்கப்பட வேண்டிய சொற்களை எவரும் அனுப்பலாம்.**

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் ஒப்பிலா மதிவாணன், சா. சரவணன், பாரதிபாலன், ம. இளங்கோவன், சிவ முருகேசன், தி. கமலி, ஊடகவியலாளர்கள் மு. முருகேசன், திரு. நீச்சல்காரன் இராஜாராமன், ரா. நிரஞ்சன் பாரதி ஆகியோர் கலந்துகொண்டனர்.



# நன்றின்பால் உய்ப்பது அறிவு

திருவள்ளுவர் வாக்கை மீண்டும் மீண்டும்
நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது-
“நன்றின்பால் உய்ப்பது அறிவு”

கனடா நாட்டில் தொரோண்டோ மாநகரில்
ஈழத் தமிழர்கள் முன்னெடுப்பில்
அக்டோபர் மாதம் நடக்க இருக்கிறது
தமிழ் மாநாடு!

மிரட்டிக் கொண்டிருக்கிறது
எல்லோரையும் செய்யறிவு!

கடந்த காலங்களைப் போல
இதையும் எதிர் கொண்டு -
ஏற்றுக் கொண்டு வளரத்
தயாராகிக் கொண்டிருக்கிறது
தமிழ்மொழியின் அடையாளத்தை அறிவிக்கக்
கனடா நாட்டில் தமிழ் மாநாடு!

செய்யறிவு உலகில்
செம்மொழித் தமிழும் தமிழரும் -
கருப்பொருள் ஆகியிருக்கிறது.

இலக்குரையாகி இருக்கிறது
“நன்றின்பால் உய்ப்பது அறிவு”

தமிழும் செய்யறிவும்
மெய்ப்பொருளியலும் பண்பாடும்
பொருளியல் சிந்தனையும் வாழ்வியலும்
தமிழர் வரலாறும் வாழ்வியலும்
வட - கிழக்குப் பொருண்மிய மேம்பாடு -
வகைப்பாடுகளில் ஆய்வரங்கம்!

ஆய்வுச் சுருக்கம் கேட்டு அறிக்கை
வந்திருக்கிறது.
அளிப்பதற்கான இணையதளம்
www.GlobalTamilConference.org

வாழ்தல் வேண்டிச் சென்றவர்கள்
செய்யறிவு உலக நெருக்கடியிலும்
தலைமுறைகளைத் தமிழோடு இணைத்துத்
தமிழ் வாழவும் வளரவும் தங்களது
பொறுப்பின் வெளிப்பாட்டைக் காட்டுகிறார்கள்!

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணாமல்
இறைவனின் முகத்தில் தாங்கள் சிரிக்க
ஊர் ஊராக ஓடிக் கொண்டிருப்பவர்கள்
இடையே தமிழின் நலம் தேடுகிறார்கள்
புலம் பெயர்ந்தவர்கள்!

ஆரவார விளம்பரங்களை விட
அறிவுக்கு முதலிடம் தருகிறார்கள்!
ஏனெனில், அறிவே சக்தி! அறிவே விடுதலை!
என்பதை அறிந்தவர்கள் அவர்கள்!

அறிவுடையார் எல்லாம் உடையார்
என்றார் திருவள்ளுவர்!
அறிவு என்பது கல்விக் கூடங்களின்
விளைச்சல் மட்டுமல்ல!
வாழ்நாள் முழுதும் கற்றல்!

புலம் பெயர்ந்தவர்கள்
கற்றுக் கொண்டிருக்கிறார்கள்!

தன்னை அறிதலே தலையாய அறிவெனில்,
அறிந்திருக்கிறார்கள் அயலகத் தமிழர்கள்!

அறிவு என்பது அறியாமையை அறிதல்!
ஒவ்வொரு காலமும் சிலருக்காவது
அதை உணர்த்திப் போகும்!

அறிவு என்பது உண்மையைத் தேடுதல்,
நல்லதைத் தேர்ந்தெடுத்தல்!

அதிகாரம் சிலருக்கு
மகிழ்ச்சியைத் தரலாம்;
ஆனால் அறிவு மட்டுமே
மதிப்பைத் தரும் என்பது
அனுபவ உரையாகி இருக்கிறது
அயலகத் தமிழர்களுக்கு!

காயங்களின் படிப்பினைகள்
அவர்களுக்கு ஞானத்தின் ஊற்றுக் கண்கள்!

வியக்க வைக்கின்றன வெற்றி-தோல்வி
கணக்குகளைத் தாண்டிய,
மக்கள் மனநிலையின் ஆழமும்
வாழ்வை எதிர்கொள்ளும் நம்பிக்கையும்!

மனம் போன போக்கில்
அறிவைப் போக விடாமல்-
சமுதாய நலனில் பொறுப்பேற்கிறார்கள்!

“சென்ற இடத்தால் செலவிடாது தீது ஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு” என்ற
திருக்குறளின்
இரண்டாவது வரியை
தமிழ் மாநாட்டின்
இலக்குரையாக்கி இருக்கிறார்கள்!

அதிகாரப் போட்டியில்
உலகம்
அமைதி இழக்கிற காலத்தில்
யாதும் ஊரே! யாவரும் கேளிர்! எனும்
உலக மானுட நேயத்தை
இரண்டாயிரம் ஆண்டுகளாக
எடுத்தோதும் தமிழைக் கொண்டாட
கனடாவில் மாநாடு!

கனடா தனி ஒரு நாடு இல்லை
அது, நாடுகளின் நாடு!

யாதும் ஊரே என்பதற்கு
இடம் தரும் நாடு!
சமூக நீதி, பொருளாதார முன்னேற்றம்
தருகிறவர்களை மதிக்கிற நாடு.

மக்களின் மனக்குறைகளையும்
பதிவு செய்து பரிவு காட்டும்
ஜனநாயகப் பண்புடைய நாடு!

மக்களை
“நன்றின்பால் உய்ப்பது”
அவர்களின் அறிவும் நம்பிக்கையும்!

குறை கூறுவதற்குப் பதிலாக,
மக்கள் நம்பிக்கையைப் பெற
நம்பகமான வழிகளையும்
கண்டடைய முயற்சி செய்பவர்கள்!

மக்கள் நலனுக்கான போட்டிதான்
ஜனநாயகத்தை வளப்படுத்தும் என்பதை
உலகுக்கு உணர்த்த விரும்புகிறவர்கள்!

தமிழ் மரபுக்கான
மாதத்தை ஒதுக்கித்
தைப்பொங்கலைக் கனடாவின்
தேசியத் திருவிழாவாகக்
கொண்டாடி வருபவர்கள்!

நல்லவற்றின் மீது
மக்களின் நம்பிக்கையை
நிலைநிறுத்துவதுதான்
அரசியலின் உயர்ந்த கடமை என்பதை
அன்றாடம் உணர்பவர்கள்!

அதிகாரம் என்பது இலக்கு அன்று;
அது ஒரு பொறுப்பு.
மக்கள் நலனுக்காக
உழைக்கும் மனநிலையைப்
பொறுப்பாக உணர்ந்து கொண்டாடி
வருபவர்கள்!

பொறுப்பை உணர்த்துவது அறிவு -
அதனால்தான்
இன்றைய செய்யறிவு உலகுக்கும்
வழிகாட்டும் ஒளியாக
மாநாட்டின் இலக்குரையாகத்
திருக்குறளைச் சொல்கிறார்கள்-
“நன்றின்பால் உய்ப்பது அறிவு!”

ம.ரா.